# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

21.10.2020 புதன்கிழமை


## புதினம் தெரியுமோ?

நேற்று வல்லைப் பாலத்தில ஒரு 10 பேர் பந்தம் கொளுத்திக் கொண்டு நிண்டவை கண்டனியளே. அரசு நாடாளுமன்றத்தில சமர்ப்பிச்சிருக்கிற 20 ஆவது திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிச்சுத்தான் அவையள் பந்தம் பிடிச்சவையளாம். என்னடாப்பா இது புதுவித எதிர்ப்பா இருக்கே எண்டு விசாரிச்சுப் பாத்தில அவையள் இங்கத்த எம்.பி. ஓராளுக்குத் தான் பந்தம் பிடிச்சிருக்கினம் எண்டு தெரிஞ்சுது கண்டியளே.

ஜனாநாயகத்துக்கான இளைஞர் அணி எண்டு சொல்லிற ஆக்கள் இதை ஏற்பாடு செய்தவையாம். இது சட்டம்பி எம்.பிட பினாமி அமைப்பு எண்டு காதில கதை

2

# முஸ்லிம் எம்.பிகளுக்கு வலை வீசும் அரசு!

## '20'க்கு பெரும்பான்மை இல்லாததால் அந்தரிப்பு

கொழும்பு, ஒக்.21

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை திரட்டும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

2

# வீதி திருத்தும் மூவருக்கு வவுனியாவில் தொற்று!

### கொரோனா சமூகப் பரவல் என அச்சம்

2

## தரம் –5 விடைத்தாள் திருத்தும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஒக்.21

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் நாளை வியாழக்கிழமை முதல்

2



## வீடுகளுக்கு திரும்பினர் 39 பேர்

வவுனியா, ஒக்.21

வவுனியா, பெரியாடு மற்றும் பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 39 பேர் இன்று வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். கட்டார் மற்றும் டுபாயில் இருந்து நாடு திரும்பி தனிமைப்படுத்தப் பட்டிருந்தவர்களே விடு விக்கப்

2



## போதனா படுகொலைகள் 33ஆவது ஆண்டு அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஒக்.21

இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணியாளர்களின் 33ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று கடைப்பிடிக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் புகுந்த இந்திய இராணு

2

## சமூக தொற்று இல்லை



பவித்திரா அழுங்குப்பிடி

கொழும்பு, ஒக்.21

"இலங்கையில் கொரோனா வைரஸ் இன்னும் சமூகத் தொற்றாக மாறவில்லை என்று தொற்று நோய் விஞ்ஞான பிரிவு அறிவித்துள்ளது" என்று சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி

2



## மாயமான மீனவர்களை தேடும் பணிகள் தீவிரம்

முல்லைத்தீவு, ஒக்.21

முல்லைத்தீவில் கடலுக்குச் சென்று கரை திரும்பாத இரு மீனவர்களைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மீனவர்களைத் தேடி 19 படகுக

2

## மதுஷ் உயிரிழந்தாலும் விசாரணை உண்டு

### பொலிஸ் பேச்சாளர் கூறுகிறார்



கொழும்பு, ஒக்.21

மாகந்துரே மதுஷ் இறந்துவிட்டார் என்பதற்காக விசாரணைகள் நிறுத்தப்படாது. அவை தொடர்ந்தும் இடம்பெறும். அதேபோல் அவர் வெளிப்படுத்திய அனைத்துப் பதிவுகளும் பொலிஸ் புத்தகத்தில் உள்ளன. அதனால் எதையும் மூடிமறைக்க முடியாது. இவ்வாறு பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பிரதி

2

## 2021 நவம்பருக்குள் புதிய அரசமைப்பு!

### உறுதி வழங்கினாராம் கோத்தாபய

கொழும்பு, ஒக்.21

2021 நவம்பர் மாதத்துக்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்ற உத்தரவாதத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வழங்கியுள்ளார் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கெவிது குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவில் இருந்த குறைப்பாடுகளை நாம் சுட்டிக்காட்டிருந்தோம். அதற்கமைய 20 தற்போது திருத்தி அமைக்கப்

2

# முஸ்லிம்...

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
“அரசமைப்பின் 20ஆவது திருத்த வரைவை நிறைவேற்றுவதற்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் தம் வசம் உள்ளது என்று அரசு முதலில் அறிவித்தது.
அதன்பின்னர் '20'க்காக எதிரணியைச் சேர்ந்த 20 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு பெறப்படும் என்ற அறிவிப்பு வெளியானது. ஆனால், இன்று ஆளுங்கட்சியிலுள்ள 20 உறுப்பினர்கள் '20' தொடர்பில் மௌனம் காக்கின்றனர்.
அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பெறுவதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளது. முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அரசு ஆதரவு கோருகின்றது என்று எனக்கும் தகவல் கிடைத்துள்ளது.
ஆனால் என்னிடம் அது தொடர்பில் கதைக்கப்படவில்லை. ஏனெனில் எமது கட்சி '20'க்கு எதிராகவே வாக்களிக்கும் -என்றார்.
அதேவேளை, ரிஷாட் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியோரின் ஆதரவைக் கோராதபோதும் அந்தக் கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அரசு கேட்டுள்ளது” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். (எ-44)

# சமூக தொற்று...

தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இன்று எதிர்க்கட்சித் தலைவரால் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் சமூகத்தொற்றாக மாறவில்லை என தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சும், இந்தப் பிரிவும் சிறப்பாகவே செயற்பட்டு வருகின்றன.
யால பகுதியில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். அந்தப் பகுதிக்கு எதிர்க்கட்சித் தலைவரும் சென்றுள்ளார். அதனால் அவரை இரண்டாம் கட்டத் தொடர்பாளராகக் கண்டறிந்து உரிய தகவலை வழங்கினோம். இதைக் கொண்டாவது எமது சிறப்பான சேவையை எதிர்க்கட்சித் தலைவர் புரிந்துகொள்ள வேண்டும். தெற்காசியாவில் நாம்தான் முதலில் பி.சி.ஆர். பரிசோதனை முறைமை மேற்கொண்டோம். முதல் 50 ஆயிரம் பேருக்கு பரிசோதனை மேற்கொள்வதற்கு 3 மாதங்கள் அதாவது 95 நாள்கள் எடுத்தன. ஆனால் மினு வாங்கொட கொத்தணி பரவலையடுத்து ஒரு லட்சம் பேருக்குமேல் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 21 புதிய ஆய்வு கூடங்களை அமைத்துள்ளோம். அதனால் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைக்க வேண்டாம் - என்றார். (எ-44)

# வீதி திருத்தும் மூவருக்கு...



வவுனியா, ஒப்.21
வவுனியா, நெடுங்கேணியில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 3 பேருக்குக் கொரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.
இந்த ஊழியர்கள் பிரபல ஒப்பந்த நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவர்கள் என்றும், அவர்கள் நெடுங்கேணியின் பல பகுதிகளில் வீதி திருத்தும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
வீதி திருத்தும் பணிகளில் ஈடுபட்ட 25 பேருக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று நடத்தப்பட்டிருந்தன. அந்த முடிவுகள் இன்று வெளியான நிலையில் மூவருக்குக் கொரோனா தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெளி மாவட்டங்களைச் சேர்ந்த இவர்கள், உள்ளூர் பணியாளர்கள் பலருடன் இணைந்து பணியாற்றியுள்ளனர். பல்வேறு இடங்களுக்கும் சென்றுள்ளனர்.
அதனால் கொரோனா சமூகப் பரவல் ஏற்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (எ-110)

## தினம் தெரியுமோ?

விழுந்திச்சு கட்டியளோ. இப்ப கட்சிக்குள்ள கிளம்பியிருக்கிற எதிர்ப்புக்களால ஆள் கடும் யோசினையில் இருக்கிறாராம். கட்சிக்குள்ள தனிக்காட்டு ராஜாவா இருந்தவர இப்ப ஒருத்தரும் மதிக்கிறேல எண்டும் ஆளுக்கு மனக்குறையாம். அதால ஆள் புதுசு புதுசா யோசிக்க ஆரம்பிச்சிருக்கிறார்.
கட்சிக்குள்ளுக்கும், வெளியிலும் சரிஞ்சு போன தன்ர செல்வாக்க நிமித்த ஆள் புதுசா அமைப்பொன்றை உருவாக்கியிருக்கிறார். அதுதான் இந்த ஜனநாயகத்துக்கான இளைஞர்கள் அமைப்பு. சரி ஏதோ அதால சனத்துக்கு நல்லது நடக்கும் எண்டு பாத்தா, ஆரம்பமே பந்தம் பிடிக்கிற வேலையா இருக்கு, அப்ப இனி எப்பிடிப் போகும் எண்டு நினைக்கவே நெஞ்சு பதறுது பாருங்கோ. கட்சிக்குள்ள தொடர்ந்தும் தன்னை தூக்கி வைச்சிருக்காட்டி தனி வழி போறதுக்கும் இப்பிடியான அமைப்புக்கள் உதவும் எண்டும் நினைக்கிறாராம் அவர். தமிழ்ச் சனத்தின்ட பக்கம் நிக்காம, மற்றப் பக்கம் நிண்டு சண்டை பிழை, அது பிழை எண்டு கதைச்சிட்டுப்போட்டு இப்ப லபோ, திபோ எண்டு கத்திறதால ஒண்டுமே நடக்கப் போறதில்லை பாருங்கோ. – பட்சி

# போதனா படுகொலைகள்...

வம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வைத்தியாலைப் பணியாளர்கள் 21 பேர் கொல்லப்பட்டனர்.
அவர்களுக்கு இன்று யாழப்பாணம் போதனா வைத்தியசாலையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அஞ்சலி நிகழ்வில் வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர்கள், கணக்காளர், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கலந்துகொண்டனர்.
பொதுச் சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. உயிரிழந்தவர்களின் உருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு சுட ரேற்றப்பட்டது.(எ-111,20,106)

# மதுஷ் உயிரிழந்தாலும்...

பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண இன்று தெரிவித்தார்.
மாகந்துரே மதுஷ் கொல்லப்பட்டுள்ள நிலையில் அவர் வெளிப்படுத்திய அனைத்து தகவல்களும் மூடிமறைக்கப்படும் என்றும், அவருடன் தொடர்பு வைத்திருந்த 80 அரசியல்வாதிகள் தப்பிவிடுவார்கள் என்றும் எதிரணி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
இது தொடர்பாகக் கேள்வி எழுப்பியபோதே ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
ஏதேனும் ஒரு விசாரணை நடைபெறும்போது அது தொடர்பான தகவல்கள், தரவுகள் முன்னர் பொலிஸ் புத்தகத்தில் மாத்திரமே பதிவுசெய்யப்படும். ஆனால் தற்போது ஒலி மற்றும் ஒளிப்பதிவும் செய்யப்படும் நடைமுறையும் இருக்கின்றது. மாகந்துரே மதுஷிடம் பல மாதங்கள் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. அவை தொடர்பான தகவல்கள் பொலிஸ் புத்தகத்திலும், குற்றப்புலனாய்வுப் பிரிவின் 'பேட்'டிலும் விசேட இலக்கத்துடன் உள்ளன.
பொலிஸ் புத்தகத்தில் தகவல்களை பதிவிட்டுவிட்டு அவற்றை அவ்வாறே வைத்திருக்கமுடியாது, தாமதமின்றி அது தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். தேவையேற்படின் அந்தப் புத்தகங்களை கொண்டுவந்து விசாரிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு இருக்கின்றது. சில சமயங்களில் அதன் பிரதிகளைக்கூட மாற்றுத் தரப்புகளுக்கு வழங்கலாம்.
பொலிஸ் புத்தகத்தில் பதிவான தகவல்களை ஒருபோதும் மறைக்க முடியாது, அவை நிச்சயம் வெளிச்சத்துக்கு வரும். நீங்கள்கூறுவதுபோல யாராவது குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருந்தால் நிச்சயம், விசாரணைகள் இடம்பெறும். கடந்தகாலங்களில் அவ்வாறான விசாரணைகள் இடம்பெற்றுள்ளன. வெளிப்படுத்திய தகவல்களை எவராலும் மறைக்கமுடியாது. நீதிமன்றத்தின் முன்னிலையில்தான் அவை முடிவுக்கு வரும். தகவல்கள் நீதிமன்றத்துக்கு வழங்கப்படும். அதேவேளை, போதைப்பொருள் விவகாரம், நிதிமோசடி, கடத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடையவர்கள் தொடர்பான தகவல்களை மதுஷ் வெளியிட்டிருந்தால் நிச்சயம் விசாரணை நடைபெறும், ஒருவர் இறந்துவிட்டார் என்பதற்காக அதனுடன் தொடர்புட்ட ஏனைய சந்தேக நபர்கள் விடுபடமுடியாது, அதற்கு சட்டத்திலும் இடமில்லை. என்றார் . (எ-44)

# தரம் –5...

ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.
கம்பஹா மாவட்டம் மற்றும் குளியாப்பிட்டிய கல்வி வலயம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் விடைத்தாள் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும், நாளை முதல் 27 ஆம் திகதிவரை 39 மத்திய நிலையங்களில் இந்த பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அனைத்து பரிசோதகர்களுக்கும் விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கு வருமாறு குறுஞ்செய்தி ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# மாயமான...

ளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
முல்லைத்தீவு, மணற்குடியிருப்பு கிராம கடற்றொழிலாளர் சங்கத்துக்கு உட்பட்ட மீனவர்கள் இருவர் கடந்த திங்கட்கிழமை அதிகாலை கடலுக்குச் சென்றிருந்தனர். அவர்கள் இதுவரை கரை திரும்பவில்லை. இது தொடர்பாக முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினர், கடற்படையினர், பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.
காணாமல் போயுள்ள மீனவர்களைத் தேடும் பணிகளில் அந்தப் பகுதி மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். நேற்றும் தேடுதல் நடத்தப்பட்டிருந்த நிலையில், இன்றும் அதிகாலை முதல் மீனவர்களைத் தேடும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-19,246)

# 2021...

பட்டுள்ளது. மக்களின் வேண்டுகோளும் அதுவாகவே இருந்தது. பௌத்த தேரர்களின் கோரிக்கைகளும் செவிமடுக்கப்பட்டுள்ளன.
அதேவேளை, தான் ஜனாதிபதியாக பதவியேற்று இரண்டாவது வருடம் நிறைவடைவதற்கு முன்னர் (2021 நவம்பர்) புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கியுள்ளார், புதிய அரசமைப்புகூட நாட்டு மக்கள் மற்றும் பௌத்த தேரர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்தே உருவாக்கப்படும் என்ற நம்பிக்கையை ஜனாதிபதி தற்போது வழங்கியுள்ளார்.
அவசர சட்டவரைபை கொண்டு வருவதற்கான ஏற்பாடும் 20 இல் இருந்து திருத்தப்பட்டுள்ளது, நாடாளுமன்றத்தைக்கூட ஜனாதிபதியால் இரண்டரை வருடங்களுக்கு பின்னரே கலைக்கலாம்.
தேசிய அமைப்பு என்ற ரீதியில் எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. என்றார். (எ-44)

# வீடுகளுக்கு...

பட்டுள்ளனர். அவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அவர்களின் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்ததை அடுத்து அவர்கள் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-110)

# சமூகத் தொற்றை மறைக்கிறது அரசு

## நாடாளுமன்றில் எதிர்க்கட்சி அரசு மீது கடும் பாய்ச்சல்

கொழும்பு, ஒக்.21
"இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் சமூகத்தொற்றாக மாறிவிட்டது. ஆனால் அதை நிராக ரிக்கும் வகையில் சுகாதார அமைச்சர் கருத்து வெளியிட்டு வருகின்றார். அதாவது அரசு தகவல்களை மூடிமறைக்கின்றது" இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.
நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.
அதில் ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பி கருத்துத் தெரிவித்தபோதே சஜித் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது குளியாப்பிட்டிய மற்றும் அதை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்ட கொரோனா கொத்தணிப் பரவல் தற்போது சமூகத் தொற்றாக மாறியுள்ளது. அரச வைத்தியர்கள் அதிகாரிகள் சங்கமும் இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆனால் சுகாதார அமைச்சர் பொறுப்பற்ற விதத்தில் கருத்து வெளியிட்டு வருகின்றார்.
சமூகத் தொற்று உள்ளது என சுட்டிக்காட்டியும், அவ்வாறு இல்லை என அவர் கூறுகின்றார். இந்த அரசு எல்லாவற்றையும் மறைக்கின்றது. ஆனால் நாம் ஒன்றையும் மறைக்கவில்லை. சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுகின் றோம். பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரங்கள் உடைந்துள்ளன. முழு நாடும் ஸ்தம்பித நிலையில் உள்ளது. பொருளாதாரமும் முடங்கியுள்ளது. நாட்டில் பெரும் சுகாதார பிரச்சினை காணப்படுகின்றது - என்றார். ( எ-44)

# '20'தை எதிர்க்க முகக் கவசம்!

கொழும்பு, ஒக்.21
அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் இன்று நூதனமுறையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைபு மீதான விவாதம் இன்று முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்றத்தில் ஆரம்பமானது. அப்போது '20 வேண்டாம்' என்ற வசனம் பொறிக்கப்பட்ட முகக் கவசத்தை அணிந்துக் கொண்டு, கையில் பட்டியும் அணிந்துகொண்டு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சபை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
அதேவேளை, '20' வேண்டாம் என்ற கொடிகளை பறக்கவிட்டவாறு ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்கள் நாடாளுமன்ற வளாகத்துக்கு அணிவகுத்து வந்தன. பின்னர் 'அழிவை ஏற்படுத்தும் 20 வேண்டாம்' என்ற கோஷத்தை எழுப்பிறவாறே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சபைக்குள் வந்தனர்.(எ-44)

# கோப்பாய் முகாமிலிருந்த ஒருவருக்குக் கொரோனா

யாழ்ப்பாணம், ஒக்.21
யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
நேற்றுக் கிடைத்த பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையில் அவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதையடுத்து அவர் மருதங்கேணி கொவிட்-19 சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். தற்போது மருதங்கேணி கொரோனா சிறப்பு மருத்துவமனையில் 22 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.(எ-26)

# கம்பஹாவில் ஊரடங்கு!

கொழும்பு, ஒக்.21
கம்பஹா மாவட்டத்தில் இன்று முதல் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
இன்று இரவு 10 மணி முதல் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 5 மணி வரையில் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

# உயரதிகாரி அறைந்ததில் கிழிந்தது சிப்பாயின் காது

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

கொழும்பு, ஒக்.21
காது சவ்வு கிழிந்த நிலையில் இராணுவச் சிப்பாய் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இராணுவ அதிகாரி சிப்பாய்க்கு அறைந்ததாலேயே சிப்பாய் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
அந்த அதிகாரி (சார்ஜன்ட்) மீது இராணுவச் சிப்பாய் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்துள்ளார்.
யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் முகாமின் உயர் அதிகாரியால் இன்று காலை பணிக்கப்பட்ட வேலைகளைச் செய்ய இராணுவ அதிகாரி (சார்ஜன்ட்) ஒருவர் தனக்கு கீழ் பணியாற்றும் ராணுவ சிப்பாய்க்குப் பணித்துள்ளார். உயரதிகாரி தெரிவித்த வேலைகளைச் செய்ய வருமாறு அழைத்தபோது இராணுவச் சிப்பாய் மறுத்ததால் இராணுவ அதிகாரி சிப்பாய்க்கு அறைந்துள்ளார். அதில் சிப்பாயின் காது பாதிக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், இராணுவத்தினராலும் இது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-106-26)

# பிளாஸ்டிக் தடைக்கு அரசு அங்கீகாரம்

கொழும்பு, ஒக்.21
தேர்ந்தெடுக்கப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புக்களுக்கு 2021 ஜனவரி முதலாம் திகதி முதல் தடைவிதிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இலங்கையில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பைக் குறைக்கும் வகையில் 2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது.
அதாவது 20 மைக்ரோனுக்குக் குறைவான பொலித்தீன் உற்பத்தி தடை செய்தல், பொலித்தீன்களால் உணவு பொதிசெய்யும் உற்பத்திகளைத் தடை செய்தல், பொலித்தீன்களைத் திறந்த நிலப்பரப்பில் எரியூட்டலைத் தடை செய்தல் போன்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ள பொலித்தீன்களுக்குப் பதிலாக மாற்று வழிகளை ஊக்குவிப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை நடவடிக்கையெடுத்துள்ளது. பொலித்தீன், பிளாஸ்டிக் முகாமைத்துவம் தொடர்பான பங்குதார நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் உடன்பாடுகளுக்கமைய ஒருமுறை பயன்படுத்தி அகற்றும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளைக் குறைக்கும் நோக்கில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. (வ-இ)

# பேலியகொட சந்தையில் 49 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஒக்.21
பேலியகொட மீன் சந்தையில் 46 வர்த்தகர்கள் உட்பட 49 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது என்று சுகாதார மருத்துவ அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.
அந்தப் பகுதியில் 105 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் 49 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
இதனையடுத்து பேலியகொட மீன் சந்தை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று சுகாதார மருத்துவ அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (க-இ)

# கொரோனாவுடன் டெங்கும் அவதானம்

யாழ்ப்பாணம்,ஒக்.22
கொரோனாத் தொற்றைத் தடுக்க முகக்கவசங்களை அணிவதோடு மட்டுமல்லாது, டெங்குத் தொற்றுப் பரவுகின்ற சூழ்நிலைகளையும் இல்லாது செய்யவேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா கோரிக்கை விடுத்துள்ளார்
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குத் தொற்று மீள ஆரம்பித்துள்ளது. நேற்று முன்தினம் மாத்திரம் 5 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பாசையூர் , சுழிபுரம், சுன்னாகம், அரியாலை, கோப்பாய் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.
தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால், நுளம்பு பெருக்கம் அதிகமாகக் காணப்படும். எனவே மக்கள் சுற்றுச் சூழலை மிகவும் தூய்மையாகப் பேண வேண்டியதும் அவசியமாகும். நாட்டில் கொரோனாத் தொற்றும் அதிகரித்துள்ள நிலையில், டெங்குத் தொற்று ஏற்படுமாயின், இரட்டை நோய் பாதுகாப்பு தொற்று ஏற்படலாம். எனவே பொது மக்கள் உரிய காப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தொற்றுக்களைத் தடுக்க முடியும். என்றார். (க-111,20)

# உக்கும் கழிவுகள் மீள் சுழற்சிக்கு பிரதேச மக்கள் ஆதரவு வேண்டும்

### *சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் தெரிவிப்பு*

கொடிகாமம், ஒக். 21

ஜப்பான் சீடா நிறுவனத்தின் 200 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்புடன் யாழ் மாவட்டத்தின் பிரதேச மற்றும் நகர சபைகளில் நடைமுறைப்படுத்தப்படும் "கமசிமா" உக்கும் கழிவுகள் மீள் சுழற்சி திட்டத்துக்கு மக்கள் சரியான முறையில் ஆதரவு வழங்க வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க. வாமதேவன் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வில் கலந்து கொண்ட இவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், கரவெட்டி பிரதேச சபையின் பொறுப்பில் பருத்தித்துறை நகரசபை மற்றும் பிரதேச சபை, வல்வெட்டித்துறை நகரசபை, வலி.வடக்கு பிரதேச சபை, வலி.கிழக்கு பிரதேச சபை, சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் நகரசபை ஆகிய எட்டு சபைகள் இணைந்து உக்கும் கழிவுப் பொருள்களை இந்த திட்டத்தின் மூலம் உள்வாங்கி அவை பசளை உரமாக மாற்றப்பட்டு விவசாய பயிர்ச் செய்கை நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படவுள்ளன.

இதற்கு ஒவ்வொரு சபைகளும் நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் தொன் உக்கும் கழிவுகளை வழங்க வேண்டும். ஆகவே உக்கக்கூடிய கழிவுகளான தென்னோலைகள் ,பனையோலைகள் வெட்டப்பட்ட வாழைமரங்கள் போன்ற உக்கும் பொருள்களை முறையாகத் தரம் பிரித்து வீடுகளில் வைத்தால் சாவகச்சேரி பிரதேச சபையினர் நேரடியாக வந்து பெற்றுக்கொள்வர்.

சபைகள் ஊடாக சேகரிக்கப்படும் உக்கக் கூடிய கழிவுகள், குறித்த செயற்திட்டத்தின் மூலம் மக்கள் பாவனைக்கு பயன்படுத்தப்படவுள்ளன. அத்துடன் கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட முள்ளிப் பிரதேசத்தில் அமைந்துள்ள மீள் சுழற்சி நிலையத்திலும் நேரடியாகச் சென்று கழிவுப் பொருள்களை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ந-159)



# வவுனியாவில் மரநடுகைத்திட்டம்

வவுனியா,ஒக்.21

மருதம் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் இருந்து யாழ் நோக்கிய மரநடுகைத் திட்டம் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மரநடுகைத் திட்டத்துக்கு வர்த்தகர்கள், இயற்கை ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அனுசரனை வழங்கியுள்ளதுடன், அவற்றை வளர்த்து பராமரிக்கும் பணிகளை மருதம் பசுமை இயக்கம் இரண்டு வருடங்களுக்கு தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளது. முதற் கட்டமாக 600 மரங்கள் ஏ-9 வீதிக்கரைகளின் இருமருங்கிலும் நடப்படவுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் அரச அதிபர் சமன் பந்துல சேன, வவுனியா வளாகத்தின் முதல்வர் மங்களேஸ்வரன், கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர் இ.விஜயகுமார், மருதம் பசுமை இயக்கத்தின் நிறுவுநர் வே.தனபாலசிங்கம், வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்கள், சுற்றாடல் அதிகார சபையினர், சமூக ஆர்வலர்கள் மற்றும் இயற்கை நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-110)

# களுபோவில மருத்துவமனை ஊழியருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.21

களுபோவில மருத்துவமனையின் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது. இதனையடுத்து அவருடன் நெருங்கிப் பழகிய பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அந்த நபர் களுபோவில மருத்துவமனையின் கொரோனா சிகிச்சை நிலையத்தில் பணியாற்றும் ஊழியர் என்றும் அவர் தெஹிவளை பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# பொலிஸ் நிலையம் மீண்டும் திறப்பு

கொழும்பு, ஒக்.21

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த கோட்டை பொலிஸ் நிலையம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். கோட்டை பொலிஸ் அதிகாரி ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி இருந்தமை இனங்காணப்பட்டதை அடுத்து பொலிஸ் நிலையம் நேற்று மூடப்பட்டிருந்தது. இந்நிலையில் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையம் வழமையான சேவைகளுக்காக மீளத் திறக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தொற்று நீக்கத்தின் பின்னரே இந்தப் பொலிஸ் நிலையம் மீளத் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)




# பொதுமக்கள் பார்வைக்கு பிரதேச சபை பாதீடு

கிளிநொச்சி, ஒக். 21

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பாதீட்டை பொதுமக்கள் பார்வையிட்டு தங்கள் அபிப்பிராயங்கள், ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளை தவிசாளருக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியும் என சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.

இன்று ஒக்ரோபர் 21 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி வரை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தலைமை அலுவலகம், புலோப்பளை உப அலுவலகம், புலோப்பளை பொது நூலகம், முள்ளிப்பற்று உப அலுவலகம், முள்ளிப்பற்று பொது நூலகம், முகமாலை உப அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் ஆகியவற்றில் பாதீடு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ந-6)

# கைக்குண்டுடன் மூவர் கைது

கிளிநொச்சி, ஒக். 21

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய குளம் கட்டைக்காடு பகுதியில் கைக்குண்டுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொடுக்கல் வாங்கல் காரணமாக இரு தரப்பினருக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பு காரணமாக மோட்டார் சைக்கிளை ஒரு சாரார் அபகரித்துள்ளனர். இதன்போது பாதிக்கப்பட்டவர் நேற்றுமுன்தினம் ஒரு கைக்குண்டைக் காட்டி மோட்டார் சைக்கிளைத் தரும்படி மிரட்டியுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கைக்குண்டை வைத்திருந்த நபரைக் கைது செய்ததுடன், அச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரையும் கைதுசெய்துள்ளனர். அத்துடன் மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ந-6)

# சாவ. பிரதேச சபையின் மகுட வாசகம் தெரிவு

கொடிகாமம், ஒக். 21

சாவகச்சேரி பிரதேச சபையின் மகுட வாசகமாக "வளமான தென்மராட்சியின் நிறைவான கிராமங்கள்" எனும் வாக்கியம் மக்களின் அதிகப்படியான விருப்புகளைப் பெற்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற சபை அமர்வில் இந்த வாக்கியத்தை மகுட வாசகமாகத் தெரிவு செய்வதென சபை உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

நாட்டிலுள்ள பெருமளவு உள்ளூராட்சி சபைகள் மகுட வாசகம் இன்றி செயற்படுவது குறித்து உள்ளூராட்சி சபையின் சம்மேளனம் உள்ளூராட்சி மன்றங்களின் பொது அமைப்புகளுடன் கலந்துரையாடி மகுடவாசகம் அமைப்பது தொடர்பாக 5 வாக்கியங்களை முன் வைத்து மக்களின் தெரிவுக்கு விட்டிருந்தனர்.

இதனடிப்படையில் மகுட வாசக விருப்புக்கள் மக்களின் விருப்புக்காக முன்வைத்து செப்டம்பர் 11 ஆம் திகதிக்கு முன் பிரதேச சபையில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தனர்.

இதன் பிரகாரம் மேற்குறித்த "வளமான தென்மராட்சியில் நிறைவான கிராமங்கள்" எனும் வாசகம் அதிகளவு விருப்புகளைப் பெற்றதால் சபையால் நேற்றைய அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ந-159,9)

# சர்வதேச சக்திகளுக்கு அரசு அடிபணியாது!

## உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.21

தற்போதைய அரசாங்கம் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேசத் தின் அழுத்தங்களுக்கு அடிபணி யாது என அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன் பில தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது,

2009 இல் பிரிட்டன் வெளிநாட்ட லுவல்கள் செயலாளரும், பிரான்சின் வெளிநாட்டுறவுகள் அமைச்சரும் இலங்கைக்கு வந்து யுத்தத்தை நிறுத்துமாறு அழுத்தம் பிரயோகித்தனர். ஆனால் யுத்தம் நிறுத்தப்பட்டதா? எனவே தற்போ தைய அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு அடிபணியாது என்பதை உறுதியாகக் கூறுகின்றேன். தற்போதைய ஜனா திபதி கோத்தாபய ராஜபக்ச பாது காப்புச் செயலாளராக இருந்த போது தமக்கு அழுத்தம் பிரயோகிப்பதற்காக வந்த இராஜ தந்திர தூதுவர்களுக்கு மிகவும் கடுமையாக இலங்கை



சுயாதீனத்தன்மையும் இறையாண் மையும் உடைய நாடு என்பதைக் காண்பித்தார். எனவே இலங்கை ஒருபோதும் வெளிநாட்டு சக்திக ளுக்கு அடிபணியாது என்ற தீர்க்க மான உத்தரவாதத்தை எம்மால் வழங்க முடியும் எனத் தெரிவித்துள் ளார். (வ-இ)



## ஹயஸ் –ஓட்டோ விபத்து

கிளிநொச்சி, ஒக்.21

முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த ஓட்டோவுடன், எதிரே வந்த ஹயஸ் ரக வாகனம் மோதியதில் ஓட்டோவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்று மாலை 6 .30 மணியளவில் A9 வீதியில் கிளிநொச்சி ரெலிக் கொம் தொலைத்தொடர்பு கோபு ரத்திற்கு அருகாமையில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

வீதியால் வந்த ஹயஸ் சடுதியாக திரும்ப முற்பட்டவேளை ஓட்டோ வுடன் மோதியுள்ளது. இவ் விபத் தில் எவருக்கும் பாதிப்பு ஏற்பட வில்லை. (ந)

## அரச அதிபர் தலைமையில் கிளி. விவசாயக்குழுக் கூட்டம்



கிளிநொச்சி, ஒக்.21

கிளிநொச்சி மாவட்ட விவசாயக்குழுக் கூட் டம் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமை யில் நேற்று பிற்பகல் 2 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த விவசாயக்குழுக் கூட்டத்தில் மாவட் டச் செயலக அதிகாரிகள் பிரதேச செயலா ளர்கள் கமநல அபிவிருத்தித் திணைக்கள, நீர்ப்பாசன திணைக்கள, விவசாயத் திணைக் கள அதிகாரிகள் மற்றும் விவசாய அமைப் புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந் தனர்.

இக் கூட்டத்தில் மாவட்டத்தில் விவசாயம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் ஆக்கபூர்வ மான நடவடிக்கைகள் தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டி எழுந் துள்ள பிரச்சனைகள் தொடர்பிலும் கலந்து ரையாடப்பட்டன. உரிய சுகாதார வழிமு றைகளை பின்பற்றியதாக சமூக இடைவெளி யைப் பேணியவாறு மேற்படி கலந்துரையா டல் இடம்பெற்றிருந்தது. (ந-222)



தாய்த்தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில் லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபனின் நாளொரு நற்பணி எனும் திட்டத்தின் ஊடாக, முள்ளியவளை பூதன்வயல் கிராமத்தில் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கான உலர் உணவுப் பொதி, வறிய மாணவர்கள் இருவருக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் தென்னங்கன்றுகள் என்பன தாய்த்தமிழ் பேரவையின் பொருளாளர் திருமதி இ.சிவ லோஜினியால் வழங்கப்பட்டன. (ந-222)

## கோணட்டுவல கிராமம் 'லொக்டவுண்'!

கம்பளை, ஒக்.21

கம்பளை, தொலுவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட மில்லகாமுல - கோணட்டுவல கிராமம் நேற்றுமுதல் தனிமைப்படுத்தப்பட்டது. கொரோனாத் தொற்றாளர் கள் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தும் நோக்கிலேயே சுகாதார அதிகாரிகளால் இந் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது. குறித்த கிராமத்தில் 425 குடும்பங்கள் வாழ்கின்றன, இதில் 35 குடும்பங்கள் சுய தனிமைப்படுத் தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. (ந-இ)

## மழையுடனான காலநிலை நிலவும்

கொழும்பு, ஒக்.21

நாட்டின் சில பகுதிகளில் மழையுடனான காலநிலை நிலவக்கூடும் என வளிமண்டள வியல் திணைக்களம் வெளியி டப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது, மேல் மற்றும் சப்ரக முவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் மழை பெய் யும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

மன்னாரிலிருந்து காங்கேசன் துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல் லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## பரீட்சார்த்திகளுக்கு இடையூறு இல்லை

கொழும்பு, ஒக்.21

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத் தப்பட்டுள்ள குளியாப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஐந்து பகுதிகளிலிருந்தும் உயர் தர பரீட்சார்த்திகள் எவ்வித இடையூ றுமின்றி பரீட்சைக்கு தோற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பீ பூஜித இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் பாதுகாப்பு பிரிவினருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## 2 இலட்சம் குடும்பங்களுக்கு ரூபா ஐந்தாயிரம் நிவாரணம்

கம்பஹா, ஒக்.21

கம்பஹாவில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத் தப்பட்டுள்ள பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ள மேலும் 2 இலட்சம் குடும்பங்களுக்கு ஐந்தாயிரம் ரூபா நிவாரணம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள் ளது. இதற்காக 1,050 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என கம்பஹா மாவட்ட அபிவி ருத்தி குழு தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான சஹன் பிரதீப் வித்தான தெரிவித்துள் ளார். கம்பஹாவில் பாதிக்கப் பட்டுள்ள 72 ஆயிரம் குடும்பங்க ளுக்கு 5 ஆயிரம் ரூபாய் நிதி யுதவி வழங்கும் நடவடிக்கை கள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள் ளன. அரசாங்கத்தால் வழங்கப் பட்டுள்ள 400 மில்லியன் ரூபா நிதியில் 139 மில்லியன் ரூபா மக்களுக்கு வழங்கப்பட்டுள் ளது. அத்துடன் மீதமுள்ள பணத்தை இன்று மக்களுக்கு வழங்குமாறு கம்பஹா மாவட் டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். அரச பணியில் இல்லாத அனைத்து குடும்பங்களும் இந்த 5ஆயிரம் ரூபா நிதி உதவியை பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (வ-இ)

‘20’க்கு எதிர்ப்பு:

# தேசிய பட்டியல் அறிவிப்பை ஒத்திவைத்தது ஐ.தே.க

கொழும்பு, ஒக்.21

20 ஆவது திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தேசியப் பட்டியல் ஆசனத்துக்கான அறிவிப்பை ஒத்திவைப்பதாக ஐக்கிய தேசிய கட்சி அறிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார். கடந்த நாள்களாக தொடர்ச்சியான கலந்துரையாடல்களை ஐக்கிய தேசியக் கட்சி நடத்தியதுடன், தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு எந்த உறுப்பினரையும் தற்போது நியமிப்பதில்லை என்ற முடிவை கட்சி எட்டியுள்ளது. நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி தனது போராட்டத்தை நாடாளுமன்றத்துக்கு வெளியில் இருந்து தொடரும் என்றும் ருவான் விஜேவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)





# கிழக்கு மாகாணத்தில் நியமனங்கள் வழங்கல்

திருகோணமலை, ஒக்.21

கிழக்கு மாகாணத்திற்கான பொது சேவையில் 93 பட்டதாரிகள் மற்றும் 16 தொழில்நுட்ப அதிகாரிகளுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்திலிருந்து 93 பட்டதாரிகள் மற்றும் 16 தொழில் நுட்ப அதிகாரிகள் பொது சேவையில் இணைத்து கொள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் திருகோணமலை மாகாண தலைமை அலுவலகங்களில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத்தின் தலைமையில் கடந்த 16ம் திகதி காலை திருகோணமலை மாகாண தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், பொதுச் செயலாளர் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ந-45)



பாலசுந்தரம் - பிரதி தம்பதிகளின் மகள் ஜெசிக்காவின் 12வது பிறந்ததினத்தை முன்னிட்டு, சுசிலன் பவுன்டேசன் நிறுவனத்தினரால் முல்லைத்தீவு பொன்னகர் முன்பள்ளி மாணவர்களுக்கு ரூபா 7,000 பெறுமதியுள்ள கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ந-222)

# தென்கொரிய பிரதமருக்கு அழைப்பு விடுத்தார் மகிந்த



கொழும்பு, ஒக்.21

தென் கொரியாவின் பிரதமர் சுங் சைகியூவை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். அவருடன் இன்று காலை தொலைபேசி ஊடாக உரையாடிய போது பிரதமர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இதன் போது, இரு நாடுகளுக்கிடையிலான உறவை மேலும் மேம்படுத்துவதற்கான விருப்பத்தை இரு தலைவர்களும் வெளிப்படுத்தியுள்ளனர். சமீபத்தில் முடிவடைந்த பொதுத் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச வெற்றி பெற்றமைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த தென் கொரியாவின் பிரதமர் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இலங்கையுடன் தொடர்ந்து பணியாற்ற விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். கொரோனா நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தபின், பிரதமர் சுங் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அழைப்பு விடுத்தார்.

மேலும் இந்த பேச்சுவார்த்தையின்போது முதலீடு மற்றும் சுற்றுலா ஆகியவை தொடர்பாகவும் இருநாட்டு தலைவர்களும் கலந்துரையாடியுள்ளனர் என பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (வ-இ)

# திருடப்பட்ட பொருள்கள் மீட்பு: பெண் உட்பட இருவர் கைது

வவுனியா, ஒக்.21

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் திருடப்பட்ட 5 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டு இலத்திரனியல் மற்றும் தளபாடப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் பெண் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா ஓமந்தை, நொச்சிமோட்டைப் பகுதியில் உள்ள பண்ணை ஒன்றில் அமைந்திருந்த வீட்டில் இருந்து தொலைக்காட்சி, குளிரூட்டி, அயன், கட்டில், மெத்தை, கண்ணாடி மேசை, கதிரை, மேசை உள்ளிட்ட சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கடந்த ஒரு மாதங்களுக்கு முன்னர் திருடப்பட்டுள்ளன என ஓமந்தை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் ஓமந்தை குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மற்றும் போதை ஒழிப்பு பொலிஸார் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையின்போது குறித்த பொருள்கள் வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு அவை மீட்கப்பட்டன. அத்துடன், பிக்கப் ரக வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள ஓமந்தை பொலிஸார் மேலும் சிலரைத் தேடி வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (ந-18)



# வாக்குவாதம் முற்றி அடித்துக் கொலை: குற்றவாளிக்கு 15 வருட கடூழிய சிறை

திருகோணமலை, ஒக்.21

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் கடற்கரையில் லைன் கயிறு காணாமல் போனமை தொடர்பான வாக்கு வாதத்தால் ஒருவரை அடித்துக் கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளியாக இனங்காணப்பட்ட குற்றவாளிக்கு 15 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

கிண்ணியா தாமரவில் பகுதியைச் சேர்ந்த நூர் முஹம்மது நியாஸ் (39 வயது) என்பவரே குற்றவாளியாக நீதிமன்றால் இனங்காணப்பட்ட வராவார்.

2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் எட்டாம் திகதி கிண்ணியா விமானப்படை முகாமுக்கு அருகில் அப்துல் வகாப் சகீட் என்பவர் கடற்கரையில் வைக்கப்பட்டிருந்த லைன் கயிற்றைத் திருடியதாக வாக்குவாதப்பட்டு அவரை அடித்துக் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பில் 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்றில் குற்றப் பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே, குற்றவாளிக்கு 15 வருட கால கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்டவரின் உறவினருக்கு ஒரு இலட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்துமாறும், தவறும் பட்சத்தில் இரண்டு வருட மேலதிக கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும், அரச செலவாக 25,000 ரூபா தண்டம் செலுத்துமாறும், மேலதிக பணத்தை செலுத்தவறும் பட்சத்தில் 6 மாத கால கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று தீர்ப்பளித்தார். (ந-45)

# மண்டபங்களில் நிகழ்வுகள் நடத்த சுகாதாரப் பிரிவினர் மீண்டும் அனுமதி

சாவகச்சேரி, ஒக்.21

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள திருமண மண்டபங்களில் மிகவும் கடுமையான நிபந்தனைகளின் மத்தியில் திருமண நிகழ்வுகளை நடத்த சுகாதாரப் பிரிவினர் மீண்டும் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மண்டபம் ஒன்றில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறும் வகையில் செயற்பட்டதால், அனைத்து திருமண மண்டபங்களிலும் நிகழ்வுகளை நடத்த சுகாதாரப் பகுதியினர் தடைவிதித்தனர்.

இந்த நிலையில் மண்டப உரிமையாளர்கள் மண்டபங்கள் மூடப்பட்டதால் தமக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவித்ததையடுத்து சுகாதாரப் பிரிவினர் மீண்டும் நிகழ்வுகளை நடத்த அனுமதி வழங்கினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

நிகழ்வில் 100 பேர் மட்டும் கலந்து கொள்ள முடியும், மண்டப உரிமையாளர் டோக்கன்கள் தயாரித்து 100 பேருக்கு வழங்கவேண்டும். மண்டபத்தினுள் சென்ற ஒருவர் வெளியேற விரும்பினால் டோக்கனை வேறொருவருக்கு வழங்கி விட்டு வெளியேறலாம். அவர் எந்தக் காரணம் கொண்டும் மீண்டும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படமாட்டார்.

கொரோனாத் தொற்று விதிமுறைகளை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும், மண்டபத்தினுள் நிற்போர் முகக் கவசம் அணிந்திருந்தல் வேண்டும், சமூக இடைவெளி பேணப்படல் வேண்டும்.

எமது சுகாதாரப் பகுதியினர் பரிசோதனைகள் மேற்கொள்ளும்போது நிபந்தனைகளை மீறும் வகையில் எவரும் காணப்படின் பங்கு பற்றிய அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவார்கள் மண்டபமும் சீல் வைக்கப்படும் என்று அறிவுறுத்தியுள்ளனர். இதேவேளை, வீடு குடிபுகுதல் மற்றும் அந்தியேட்டி நிகழ்வு களில் 50 பேருக்கு உட்பட்டவர்கள் கலந்து கொள்ள சுகாதாரப் பகுதியினர் அனுமதி வழங்கி வருகின்றனர் என்றனர். (ற-9)



## மழை வெள்ளம் தேங்கும் வீதி: சீரமைக்குமாறு போராட்டம்

கிளிநொச்சி, ஒக்.21

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் முக்கிய வீதி ஒன்றில் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிராம மக்களால் நேற்றையதினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஸ்கந்தபுரம் பொதுச் சந்தைக்கு அருகில் செல்லும் வீதியில், மழை காலத்தில் பல இடங்களில் நீண்ட தூரங்களுக்கு மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்து செய்யமுடியாது. மாணவர்கள் பாடசாலைக்கு நடந்து செல்ல முடியாது எனத் தெரிவித்த மக்கள், குறித்த வெள்ள நீர் வழிந்தோடுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுதருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கைவிடுத்தனர்.

இந்நிலையில், இங்கு சென்ற கிராம அலுவலர் மக்களுடன் கலந்துரையாடி குறித்த வெள்ள நீரினை அகற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். சம்பவ இடத்துக்கு வந்த கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சு.தயாபரன் மழை வெள்ளம் ஏற்படுத்தும் பாதிப்புகளை கேட்டறிந்ததுடன் அதனை எவ்வாறு வழிந்தோட வைப்பது என மக்களுடன் கலந்துரையாடினார்.

குறித்த வெள்ள நீரினை தற்போது குடியிருக்கும் மக்களின் காணிகளுக்கு ஊடாக முதற்கட்டமாக வழிந்தோடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (ந-ரி2)



வடமராட்சி இளைஞர்களால் வல்லைப் பாலத்தில், நேற்று இரவு 8 மணியளவில் 20வது அரசமைப்புக்கு எதிராக தீப்பந்தமேந்திப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான இளைஞர் செயற்பாட்டுக் குழுவின் வேண்டுகோளுக்கு அமைய இப் போராட்டம் முன்னெ டுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-20)

## டிப்பர்– உழவு இயந்திரம் விபத்து: உழவு இயந்திர சாரதி படுகாயம்

மட்டக்களப்பு, ஒக்.21

டிப்பர் வாகனமும் உழவு இயந்திரமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் உழவு இயந்திரத்தின் சாரதி படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேசத்தில் இருந்து வாகனேரி நோக்கிச் சென்ற டிப்பர் வாகனம் எதிரே வந்த டிப்பர் வாகனம் போவதற்கு வழிவிட்ட சந்தர்ப்பத்தில் டிப்பருக்கு பின்னால் வந்த உழவு இயந்திரம் டிப்பருடன் மோதியுள்ளது என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். காயமடைந்த உழவு இயந்திரத்தின் சாரதி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சிசைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-150)



## 12 ஆயிரம் பனம் விதைகள் நடுகைத்திட்டம் ஆரம்பம்

மன்னார், ஒக்.21

மன்னார் மாவட்டத்தில் 12 ஆயிரம் பனம் விதைகளை நடுவதற்கான வேலைத் திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம் என்று மன்னார் பதில் மாவட்டச் செயலர் சிவபாலன் குணபாலன் தெரிவித்துள்ளார்.

தேசிய மரநடுகை வாரத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மரநடுகை நிகழ்வின் பின் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் 180க்கும் மேற்பட்ட மரங்கள் இன்று (நேற்று) வழங்கப்பட்டன. மன்னார் வனவளத் துறையினரின் ஒத்துழைப்போடு ஒவ்வொரு பிரசேங்களிலும் மர நடுகை சம்பந்தமான வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது சுற்றுலாத்துறையை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு உள்ளூராட்சி மன்றங்களும் அதன் பொறுப்புக்களை எடுத்திருக்கின்றன. இதனடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் கவர்ச்சி தரக்கூடிய மரங்களை நடுவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் சுற்றுச்சூழல் அதிகார சபையினால் மரங்களை நாட்டுவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டிருக்கின்றன- என்றார். (ந-213)

## மட்டக்களப்பிலும் நேற்று விளக்கு அணைத்து போராட்டம்

20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக மட்டக்களப்பிலும் நேற்று இரவு 8 மணிக்கு விளக்குகள் அணைக்கப்பட்டு மெழுகுதிரிகள் ஏற்றப்பட்டு எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் இராசமாணிக்கம் இல்லத்தில் ஒன்றுகூடிய இளைஞர்கள் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். இதன்போது வீட்டின் மின்குமிழ்கள் அணைக்கப்பட்டு கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி தமது போராட்டங்களை முன்னெடுத்தனர்.

20வது திருத்தச் சட்டம் என்பது தமிழ் மக்களை இந்த நாட்டில் குழிதோண்டி புதைக்கும் சட்டம் எனவும் அதற்கு எதிராக சிறுபான்மை கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும் எனவும் இளைஞர்கள் கோரிக்கை விடுத்தனர். (ந-இ)

# எஸ்.பி.பி. சாவுக்கு சீனாவே காரணம்

## சர்வதேச நீதிமன்றில் மனுத்தாக்கல்



பிரபல பாடகர் எஸ்.பி பாலசுப்ரமணியம் உயிரிழந்தமைக்கு சீனாவே காரணம் என சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலத்தின் விஜயவாடாவை சேர்ந்த சீனிவாச ராவ் எனும் ரசிகர் ஒருவரே சர்வதேச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 8 மாதங்களாக கொரோனா வைரஸ் தொற்றால் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் பொருளாதாரம் சீர்குலைந்து விட்டது எனவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். கொரோனா வைரஸை உருவாக்கியதாக சீனா மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், சீனா இதுவரை அதற்கு எவ்வித பதிலும் வழங்க வில்லை எனவும் அந்த மனுவில் குறிப்பி டப்பட்டுள்ளது என த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

கண்ணுக்கு புலப்படாத நுண்ணுயிர்க் கொல்லியை உலகம் முழுவதும் சீனா பரவச் செய்ததாலேயே பிரபல பாடகர் எஸ்.பி.பி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் உயிரிழந்துள்ளனர். இதனால் சீனா மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சீனிவாச ராவ் எனும் நபர் வலியுறுத்தியுள்ளார். (வ-இ)



## கொரோனாக் கட்டுப்பாடுகளை மேலும் அதிகரித்தது இத்தாலி

ரோம், ஒக்.21

கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதால் இத்தாலி கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கியுள் ளது. இந்த அறிவிப்பை வெளியிட்ட அந்நாட்டு பிரதமர் குயிசெப்பே கொண்டே, புதிய முடக்க நிலையை தவிர்ப்பதற்கு இந்தக் கட்டுப்பாடுகள் அவசியம் என்று தெரிவித்துள்ளார். இதன்படி, இரவு ஒன்பது மணிக்கு பின்னர் பொது இடங் களை மூடும் அதிகாரம் மற்றும் உணவு விடுதிகள் திறப்பது மற்றும் அனுமதிக்கப்படுப வர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் அதிகாரம் நகர மேயர்களுக்கு வழங்கப்பட்டுள் ளது. (வ-இ)



## பிரித்விராஜுக்கு கொரோனா

புதுடில்லி, ஒக்.21

மலையாள நடிகர் பிரித்விராஜுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அவர் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார்.

கொரோனாப் பரவலின் ஆரம்பத்தில் படப்பிடிப்பு ஒன்றுக் காக வெளிநாட்டில் சிக்கிய அவர். பல நாட்களின் பின் அண்மையிலேயே இந்தியா திரும்பினார். சில தினங்களுக்கு முன்பு 'ஜன கண மன' படப்பிடிப்பில் கலந்து கொண்டார். அதன் படப்பிடிப்பு ஆரம்பிக்கும்போது அனைத்துப் படக்கு ழுவினருக்கும் கொரோனாப் பரிசோதனை செய்தார்கள். தற்போது படப்பிடிப்பு முடிவடையும்போது கொரோனாப் பரிசோதனை செய்துள்ளனர். அப்போது பிரித்விராஜுக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதியானது. (வ-இ)

## பட்டியலில் சூடானை நீக்கியது அமெரிக்கா

வொஷிங்டன், ஒக்.21

பயங்கரவாதத்துக்கு அரச ஆதரவு வழங்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து சூடான் நீக்கப்படுகிறது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சூடானின் புதிய அரசாங்கம், பயங்கரவாதத் தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் இழப்பீடு வழங்க இணங்கி யுள்ளது. புதிய அரசாங்கத்தின் கீழ், சூடான் முன்னேற்றமடைமந்து வருகிறது என அமெ ரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித் துள்ளார்.

இந்நிலையில், சூடானால் அமெரிக்காவுக்கு செலுத்தப்படவிருந்த 335 மில்லியன் ரூபா நஷ்டத்தொகை தற்போது செலுத்தப்பட்டுள் ளது என சூடான் பிரதமர் அப்தல்லா ஹம் டொக் தெரிவித்துள்ளார். (வ-இ)

## உலக அளவில் பிரபலமாக ஒலிக்கும்

# சுவிஸ் தமிழ் பெண்ணின் குரல்

பாரிஸிலிருந்து
குமாரதாஸன்



ஈழத்தமிழ் பூர்வீகத்தைக் கொண்ட சுவிஸ் பெண்ணான பிரியா ரகு உலகளாவிய ரீதியில் அறியப்படும் பிரபல பாடகியாக மாறுகிறார்.

சூரிச்சை தளமாகக்கொண்ட 34 வயதான பிரியா ரகு அமெரிக்காவின் பொப் உட்பட மேற்கு இசையில் பாடல் அல்பங்கள் சிலவற் றைத் தனது சுயமுயற்சியால் தயாரித்து வெளி யிட்டு சுவிற்சர்லாந்து இசைப் பரப்பைத் தன்பால் ஈர்த்திருந்தவர்.

இறுதியாக அவர் வெளியிட்ட "Good Love 2.0" அல்பம் அவரை உலகளாவிய இசை அரங்கிற் குக் கொண்டு சென்றிருக்கிறது.

அண்மையில் பிபிசியில் வெளியிடப்பட்ட "Good Love 2.0" அமெரிக்க ஊடகமான நியூ யோர்க் ரைம்ஸின் இசை விமர்சகர்களது "விருப்பத்துக்குரியது" என்ற கவனத்தை ஈர்த்த தன் ஊடாக பிரபல சர்வதேச இசைக் கம்பனிக ளின் வாய்ப்புகள் அவரை எட்டியுள்ளன.

உலக அளவில் மிகப்பெரும் இசைப்பதிவு வெளியீட்டு பல் தேசியக் கம்பனியான "வார்னர் மியூசிக்" (Warner Music) பிரியா ரகுவு டன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டுள்ளது என்ற செய்தி இந்த வாரம் வெளியாகி உள்ளது.

உலகப் புகழ் பெற்ற உதைபந்தாட்ட தொடர் FIFA வீடியோ கேம் (football video game FIFA) அதன் 2021 பதிப்புக்கான தொடக்க இசையாக பல நட்சத்திரப் பாடகர்களுடன் பிரியா ரகுவின் குரலையும் பதிவு செய்துள்ளது. இதன் மூலம் உலகெங்கும் பல மில்லியன் இல்லங்க ளில் அவரது குரல் ஒலிக்க உள்ளது.

இவ்வாறு உலக அளவில் அறியப்படும் முதல் சுவிஸ் பெணாக மாறும் பாடகி பிரியா ரகு பற்றிய செய்திகளை சுவிஸ் ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டி ருக்கின்றன.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பிரியா ரகுவின் பெற்றோர் 1981 இல் சுவிற்சர்லாந்தில் குடியேறி உள்ளனர்.

சுவிஸில் செங்காளன் (St.Gallen)என்ற பகுதியில் பிறந்து வளர்ந்த பிரியா ரகு தற்போது விமானப் பொறியியல் தொழில்நுட்பவியலாளராகப் பணி புரிகிறார். சிறுவயது முதல் தனது சகோத ரனுடன் சேர்ந்து பல பாடல்களை சுயமாக எழுதி, இசையமைத்துப் பாடி இன்று இசை உலகில் அவர் பெரும் உச்ச வளர்ச்சியை எட்டி யுள்ளார் என்று ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.




# கண்டி அணியை வாங்கிய சல்மான்

கொழும்பு, ஒக்.21

லங்கா பிரிமியர் லீக் தொடர் எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், கண்டி டஸ்கர்ஸ் அணியின் உரிமத்தை பொலிவூட் நட்சத்திரம் சல்மான் கானின் குடும்பத்தினர் வாங்கியுள்ளனர்.

சல்மான் கானின் சகோதரர் சோஹைல் மற்றும் பிரபல திரைக்கதை எழுத்தாளரான அவரது தந்தை சலீம் கான் ஆகியோரே கண்டி டஸ்கர்ஸ் அணியின் உரித்தைப் பெற்றுள்ளனர்.(எ)



# சாதனை படைத்த தவான்

டுபாய், ஒக்.21

ஐ.பி.எல். தொடரில் அடுத்தடுத்து இரு சதங்களைப் பெற்றுப் புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளார் ஷிகர் தவான்.

டெல்லி கப்பிட்டல் அணியின் ஆரம்ப வீரரான ஷிகர் தவான், சென்னைக்கு எதிரான ஆட்டத்தில் சதம் பெற்றிருந்தார். நேற்றுமுன்தினம் நடந்த பஞ்சாப் அணிக்கு எதிராகவும் அவர் சதம் பெற்றிருந்தார்.

ஐ.பி.எல். தொடரில் அடுத்த அடுத்த ஆட்டங்களில் சதம் பெற்ற முதல் வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

அதேவேளை, ஐ.பி.எல். தொடரில் ஒன்றுக்கு மேற்பட்ட சதம் பெற்ற இரண்டாவது இந்திய வீரர் என்ற பட்டியலிலும் அவர் இணைந்துள்ளார். முன்னதாக விராட் கோலி ஒரு தொடரில் 4 சதங்களைப் பெற்றுள்ளார். (எ)

# இயனின் கனவு அணி

டுபாய், ஒக்.21

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமான ஐ.பி.எல்.தொடரின் பாதி ஆட்டங்கள் முடிந்து விட்டன. ஒவ்வொரு அணியும் குறைந்தது 10 ஆட்டங்களில் விளையாடிவிட்டன.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரும், தற்போதைய வர்ணனையாளருமான இயன் பிஷப் இதுவரை நடந்த போட்டிகளை வைத்து அணி ஒன்றைத் தெரிவு செய்துள்ளார்.

அந்த அணியில் ரோகித் சர்மா, விராட் கோலி, டிவில்லியர்ஸ், கெயில் மற்றும் மகேந்திர சிங் டோனி போன்றவர்கள் இடம்பெறவில்லை.

இயன் பிஷப் தேர்வு செய்த அணி விவரம்:

கே.எல் ராகுல் (விக்கெட் கீப்பர்), டூபிளசிஸ், சூர்யகுமார் யாதவ், ஸ்ரேயஸ் ஐயர், கீரன் பொலார்ட் (அணித் தலைவர்), ஹார்திக் பாண்டியா, ரசீத் கான், முகமது ஷமி, காகிசோ ரபாடா, யுஸ்வேந்திர சஹால், ஜஸ்ப்ரிட் பும்ராஹ். (எ)



# ஒலிம்பிக்கை சீர்குலைக்க ரஷ்யா சைபர் தாக்குதல்!

## அமெரிக்கா, பிரிட்டன் குற்றச்சாட்டு

லண்டன், ஒக்.21

2018 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை சீர்குலைக்க முயற்சிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னணியில் ரஷ்யாவின் இராணுவ புலனாய்வுப் பிரிவு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்று அமெரிக்காவும், பிரிட்டனும் தெரிவித்துள்ளன.



சிறப்பு தொழில்நுட்பங்களுக்கான முதன்மை மையம் என்றும் அழைக்கப்படும் ரஷ்யாவின் ஜி.ஆர்.யு இராணுவ புலனாய்வுத் துறையின் 74455 பிரிவு இந்த சைபர் தாக்குதல்களை நடத்தியது என்று பிரிட்டனும், அமெரிக்காவும் கூறியுள்ளன.

சைபர் தாக்குதலில் ஈடுபட்டமைக்காக 6 ரஷ்ய உளவுத்துறை அதிகாரிகள் மீது அமெரிக்க நீதித்துறை வழக்குப் பதிவும் செய்துள்ளது.

ரஷ்யாவின் ஜி.ஆர்.யு இராணுவ புலனாய்வுத் துறையின் முன்னாள் மற்றும் தற்போதைய உறுப்பினர்கள் 6 பேர், அழிவுகரமான மற்றும் அதிநவீன ஹக்கிங் தாக்குதல்களை 2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டுவரை பல்வேறு இடங்களில் நடத்தியுள்ளனர் என்று அமெரிக்க நீதித்துறை கூறியுள்ளது. உக்ரைன் பவர் கிரிட் மீது நடத்தப்பட்ட ஹக்கிங்கால் சுமார் 1 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்பட்டது. அதேபோல் குளிர் கால ஒலிம்பிக் மற்றும் பிரான்ஸ் தேர்தல் ஆகியவற்றை சீர்குலைக்கும் வகையில் கடும் சிக்கலை ஏற்படுத்தும் "மால்வேர்" மூலமாக ஹக்கிங்கில் இவர்கள் ஈடுபட்டுள்ளனனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஆதிக்கம் செலுத்த ரஷ்யா முயற்சித்தது என்று குற்றச்சாட்டுகள் எழுந்த போதிலும் இது தொடர்பாக எந்த குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்படவில்லை. தென்கொரியாவில் நடைபெற்ற குளிர் கால ஒலிம்பிக் போட்டியின் போது அது தொடர்பான தரவுகளை கொண்ட கணினிகள் ஹக் செய்யப்பட்டன என்றும், பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலின் போது, முக்கிய நபர்களின் மின்னஞ்சல் முகவரிகள் ஹக்கிங் செய்யப்பட்டுப் பகிரங்கப்படுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

# 'உயர்ந்த' சாதனை!



கின்னஸ் சாதனைக்கென எந்த வரையறையும் கிடையாது. புதுமையாகவும் வித்தியாசமாகவும் இருக்கும் எதுவும் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துவிடலாம். அப்படித்தான் அமெரிக்காவைச் சேர்ந்த 17 வயதுப் பெண் கின்னஸில் இடம்பிடித்துள்ளார். இந்தப் பெண்ணின் கால்கள்தான் உலகிலேயே மிகவும் நீளமான கால்கள் என்ற சாதனையுடன் கின்னஸில் இடம் பிடித்துள்ளார்.

பொதுவாக 6 அடி உயரம் இருந்தாலே, தென்னைமரம் என்று கிண்டலாக அழைப்பார்கள். ஆனால், அமெரிக்காவின் டெக்சாஸைச் சேர்ந்த மசி குரின் என்ற இளம் பெண்ணின் உயரம் 6 அடி 10 அங்குலம். தெருவில் நடந்துவந்தால், ஓர் ஏணி நடந்துவருவதுபோல இருக்கிறார் மசி குரின். இவருடைய மொத்த உயரத்தில் கால்கள் மட்டுமே 4 அடி. அதாவது மொத்த உயரத்தில் 60 சதவீதம் கால்களின் உயரம். இதனால், உலகின் நீளமான கால்களைக் கொண்ட மனிதர் என்ற கின்னஸ் சாதனையை மசி குரின் படைத்துள்ளார். அண்மையில் இதற்கான சான்றிதழையும் கின்னஸ் நிறுவனம் அவருக்கு வழங்கியது. கின்னஸ் சாதனையைத் தாண்டி, உலகின் உயரமான மொடல் என்ற சாதனையை நிகழ்த்த வேண்டும் என்பதே இவருடைய விருப்பமாம்!

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்சால் 21.10.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.